Bhagya Tamil Weekly Regd No: TN/CH(C)/301/09-11
Registered with the Registrar or Newspaper for India under No: 42805/88 WPP LICENCE No: 356/09-11









# இப்படி ஒருவரா?

வெள்ளைக்காரனை நம் நாட்டை விட்டே விரட்டி அடித்தார் மகாத்மாகாந்தி. ஆனால் அதே வெள்ளைக்காரன்தான் தன்னுடைய நாட்டில் நம் காந்திக்கு சிலை வைத்து, தபால் தலை வெளியிட்டு, அஹிம்சை, அமைதி என்றாலே அதன் குறியீடு(SIMBAL) மகாத்மாகாந்தி தான் என்று இன்றும் கொண்டாடி வருகிறான். 100 உலக நாடுகளில் சிலை நிறுவப்பட்டிருப்பது ஒரே தலைவர் காந்தி ஒருவருக்குத்தான். அப்பேறப்பட்ட அண்ணல் காந்தியைப் பற்றி நம் ஊர்க்காரரான ராஜேஷ், 1948ல் இருந்து, இந்தியாவில் ஆரம்பித்து, உலக நாடுகள் முழுக்க வெளியிடப்பட்ட காந்தி தபால்தலை, காந்தி உருவம் பொறிக்கப்பட்ட நாணயம், புகைப்படம் என்று அத்தனையும் பல லட்சரூபாய் செலவழித்து சேகரித்து வைத்திருக்கிறார். அக்டோபர் 2 ஆன காந்தியின் பிறந்த நாளையொட்டி அவரை சந்தித்து பேசியபோது,

“கும்மிடிப்பூண்டியில் அப்பா லோகநாதன் மர வியாபாரி. அம்மா லட்சுமிதேவி. இவர்களுக்கு நான் ஒரே பிள்ளை. மீஞ்சூர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது, என் சக மாணவ நண்பர்கள் நடிகர், நடிகை படங்களை சேகரித்து நோட் புக்கில் ஆல்பமாக ஒட்டி வைப்பார்கள். அவர்களைப் பார்த்துதான் நான் அப்பா கொடுக்கும், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்கும் உறவினர்கள் மிட்டாய், பிஸ்கட் வாங்கி சாப்பிடச் சொல்லி





கொடுக்கும் காசுக்கு காந்தி படம் போட்ட ஸ்டாம்புகளை வாங்கி சேகரிக்க ஆரம்பித்தேன். அந்த ஹாபியே, இன்று லட்சக்கணக்கில் பணம் செலவழித்து, எல்லா நாடுகளில் இருந்தும் ஸ்டாம்புகள் வரவைத்து சேகரித்து வைத்துள்ளேன்.

ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் கம்பெனியில் வேலை பார்க்கிறேன். வாங்கும் சம்பளத்தின் பாதியை மட்டும் அல்லாமல், இருக்கிற லோனையெல்லாம் போட்டு காந்தி தபால்தலை, அவர் போட்ட கையெழுத்து புகைப்படம் என்று வீடு முழுக்க சேகரித்து வைத்திருக்கிறேன்.

2008ல் 2 லட்ச ரூபாய்க்கு நான் ஸ்டாம்ப் வாங்கும்போது, கும்மிடிப்பூண்டியில் கிரவுண்ட் 70 ஆயிரம் ரூபாய் விற்றது. அன்னிக்கு இந்த ஸ்டாம்புக்கு பதிலா இடம் வாங்கிப் போட்டிருந்தா, இன்னிக்கு அதோட மதிப்பு கோடி கணக்குல ஆயிடுச்சே என்று என் மனைவி எப்பொழுதாவது, கொஞ்சம் ஆதங்கப்படுவாள்.

ஆனாலும் இந்த ஹாபி எனக்கு கூடியிருக்கிறதே தவிர, குறையவில்லை. இதற்கு இன்னொரு காரணம் “எந்த இளைஞனுக்கும், ஏதாவது ஒரு ஹாபி இருந்தால் அவனுக்கு கெட்ட பழக்கமோ, கெட்ட எண்ணங்களோ வராது” என்று சின்ன வயதில் நான் எங்கோ படித்தது. இன்று என் வாழ்க்கையை ஒழுக்கமாக, நேர்மையாக வாழ வழி நடத்திக் கொண்டிருக்கிறது.

—மணவை.